ESTD - 1996

NAINATIVU CANADIANS DEVELOPMENT SOCIETY

நயினாதீவு - கனேடிய அபிவிருத்திச் சங்கம்

பெருமையுடன் வழங்கும்

# தீபம்

# 2011


## 15வது ஆண்டு மலர்

**Nainativu Canadian Development Society**

2682 Eglinton Ave.E.P.O.Box 44535,
Scarborough, ON M1K 2S0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்

15 வது ஆண்டில் பெருமையுடன்
வழங்கும்

# தீபம்
# கலைமாலைப் பொழுது
# 2011

April 30, 2011 சனிக்கிழமை மாலை 5:00 மணி

**Sir. John A. McDonald**

*2300 Pharmacy Avenue, Agincourt, Ontario, M1W 1H8*
*(Pharmacy & Finch)*


## Nainativu Canadian Development Society

**2682 Eglinton Ave. E. P.O BOX 44535, Scarborough, ON. M1K 2S0**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Nainativu Canadian Development Society

## Committee Members 2011

**President:**
K. Kirubananthan

**Vice President:**
R. Thiruvathanan

**Hon. Secretary:**
V. Manohar

**Asst. Secretary:**
K. Subashsanthirabosh

**Hon. Treasurer:**
T. Vignarajah

**Editor:**
M. Raveendran

**Accountants:**
M. Raveendran
S. Kulamogan
S. Vimalananthan

**Committee Members:**
N. Jayasivathasan
A. Sathananthan
T. Elankumaran
S. Murugavel
K. Navaneethan
P. Nanthakumar
N. Srimurugathasan
K. Ramathas
P. Sundaravel
S. Umaimaran
T. Sivayogalingam
K. Nithyaananthasivam
M. Sasivanan
S. Pirabaharan
S. Mohanarajan
R. Vijayakumar
P. Uthayapalan
M. Vivekananthan
P. Yokeswaran
T. Parameshwaran
V. Kuganathan
N. Sutharshan
M. Uthayavaanan
M. Parameshwaran
M. Sivanesan
M. Piragash
K. Kulasingam

## ஊர் கூடிக் குதூகலிக்க கோடைகால ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும்

# நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தின் பதினைந்தாவது ஆண்டு வருடாந்த கோடைகால ஒன்றுகூடல்

கனடா வாழ் நயினை மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்**
**எதிர்வரும் 2011 ஆடி மாதம் 31ம் திகதி**
**ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி**

**இடம்**
**Morningside Park Area 8 & 9**
**(Morningside & Ellesmere)**

தொடர்புகளுக்கு:

**திரு. கிருபா 647-209-1917** **திரு. மனோ 647-330-9645**

**திரு. விக்கி 416-618-8911**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்க கீதம்

## எடுப்பு

நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம்
நன்றாற்றி என்றும் வாழ்க!

## தொடுப்பு

மனமொழி மெய்களால் நாக பூஷனி
மலர்ப்பதம் நித்தமும் பணிவோம்! (நயினாதீவு...)

## முடிப்பு

சர்வ மதங்களின் சந்நிதி மேகலை
சார்மணி பல்லவம் ஓங்க!
பல்லினச் சமூகப் பண்புடன் இணைந்து
நல்வளம் பெருக்கி பகிர்வோம் (நயினாதீவு...)

சூழ்அலைக் கரங்கள் துதித்திட, வேப்பம்
தூநிழல் தென்றலும் ஆற்றும்
ஆழ்கடல் முத்தம் அணிசெய, ஆன்ற
அருந்தமிழ் புலமை ஆளும் (நயினாதீவு...)

அன்னம் பாலித்து அமுத சுரபியும்
அற்றார் பசிப்பிணி தீர்க்கும்
இன்னும் மழலைச் செல்வமும் தருவாள்
பென்னம் பெரிய பிராட்டி (நயினாதீவு...)

நேயமாய் எங்கள் ஊர்நலம் சிறக்க
வாய்மையும் தூய்மையும் வளர்ப்போம்
தாயகம் மறவாத் தனித்துவத் தோடு
தமிழர் நாங்கள் வாழ்வோம். (நயினாதீவு...)

முற்றும்

ஆக்கம்: நயினை கவிஞர் நாக சண்முகநாதபிள்ளை BSc.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அருள்மிகு

# கனடிய நயினாதீவு நாகம்மாள் கோவில்

## Nainativu Nagammal Kovil of Canada

**Tel: 416-293-4000 Fax: 416-293-9536**

**www.nainainagammal.ca**



***கோவில் திறந்திருக்கும் நேரம்***

*நாள்தோறும் காலை 8:00 மணிமுதல் பகல் 1:00 மணிவரை*
*மாலை 5:00 மணிமுதல் இரவு 9:00 மணிவரை*
*நயினை நாகம்மாளுக்கே உரித்தான நாக சாந்தி, கனடிய நயினாதீவு நாகம்மாள் கோவிலில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.*

## நயினாதீவு நாகம்மாள் கலாசார நிலையம்

### (Nainative Nagammal Cultural Centre)

திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், கலை கலாசார நிகழ்வுகள், நூல் வெளியீடுகள், ஊர்மக்களின் ஒன்றுகூடல்கள், அரங்கேற்றங்கள் மற்றும் தமிழர் அடையாள நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு கோவிலுடன் தொடர்பு கொள்ளவும்.

**1537-1539 Warden Ave, Scarborough, ON M1R 4Z8**

**(Warden & Ellesmere) Enter via continental place**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவரின் பார்வையில்



வணக்கம்

நயினாதீவு கனடிய அபிவிருத்திச் சங்கத்தின் வாயில் ஊடாக உங்களை பார்க்கிறேன். இவ்வேளையில் சில விடயங்களை பகிர்ந்து கொள்ளலாமே என்று! நாம் புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்கிறோம். இங்கே எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. கிடைக்க ஏற்படுத்தி கொள்கிறோம். ஆனால் நாம் பேசும் தமிழ் மொழியையும் பின்பற்றி வரும் சமயத்தையும் பணம் கொடுத்துத்தான் பெற்றுக் கொடுக்கிறோம் நம் பிள்ளைகளுக்கு. நாம் தமிழ் ஈழமண்ணில் பிறந்து வாழ்ந்து வந்த படியால் சிறுவயதில் இருந்து நமது மொழி, சமயத்தை பின்பற்றி வந்தோம், வருகிறோம். ஆனால் புலம் பெயர்ந்த நாட்டில் பிறந்து வளர்ந்து வரும் நம் சிறார்களுக்கு நாங்கள் தான் இவற்றை சொல்லிக் கொடுக்க வேண்டும். ஏனெனில் இங்கு பாடசாலையில் பெற்றுக் கொள்ள முடியாத நிலையுள்ளது.

உதாரணத்திற்கு சரஸ்வதி பூசை இது எந்த மாதம் வரும், எந்த திகதியில் தொடங்கி முடியும் என்பவற்றை நாம் சிறுவயதில் இருந்து பின்பற்றி வருகிறோம். அதுபோன்று நம் சிறார்கள் நமது தமிழ்மொழி, சமயம், கலாசாரம் போன்றவற்றை பின்பற்ற வேண்டும் என்பதற்காகவே இது போன்ற முத்தமிழ் விழாக்கள் (தீபம்) நடாத்தப்படுகின்றன. இதில் அவர்கள் பங்கு பற்றுகின்ற போதிலும், பார்த்து, கேட்டு அறிகின்ற போதிலும் பல விடயங்களை தெரிந்து கொள்ள முடியும். பிற்காலத்தில் அவர்களே இதுபோன்ற தமிழ் கலாசார நிகழ்ச்சிகளை கொண்டு நடத்த முடியும், நடத்த வேண்டும் அதற்கு பெற்றோர்கள் ஆகிய நீங்கள் வழிகாட்டியாக இருக்க வேண்டும். சில பெற்றோர்கள் இது போன்ற நிகழ்ச்சிகள் தேவையில்லை என்ற கருத்தோடு நடந்து கொள்கிறார்கள். ஆங்கிலம் மட்டும் தெரிந்தால் போதும் என்ற நிலையில் இருக்கிறார்கள்.

தமிழ்மொழி பேசத்தெரியாத சிறார்கள் உள்ள குடும்பங்களில் சிறு, சிறு பிரச்சனைகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றது. அத்துடன் வயது முதிர்ந்தவர்களுடனும் பேச முடியாத நிலை உருவாகிறது. ஆகவே புலம் பெயர்ந்த நாட்டில் இயங்கும் இந்த சங்கம் நாம் வாழும் நாட்டிலும், நாம் பிறந்த மண்ணிலும் பல செயற்பாடுகளை செய்து கொண்டு இருப்பதை நீங்கள் புரிந்து கொண்டு எங்களுடன் இணைந்து செயற்படவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

வாழ்க தமிழ், வளர்க தமிழ், வெல்க தமிழீழம்

என்று தலைவணங்கி நிற்கும்

**கனகரெத்தினம் கிருபானந்தன்**

தலைவர்

நயினாதீவு கனேடிய அபிவிருத்தி சங்கம்.

## உரிமையோடு ஒரு சில வார்த்தைகள்



பல்வேறு நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்து, பல்கலாசார சூழலில் வாழ்கின்ற பல்வேறு இனக் குழுமங்கள், தமது பண்பாட்டுக் கோலங்களை பாதுகாத்து அதனை தமது அடுத்த சந்ததிக்கு வழங்கும் பொருட்டும், தமது வாழ்வியலின் சிறப்புக்கருவூலங்களை மற்றைய இன மக்களும் புரிந்து கொள்ளவேண்டும் என்ற பெருநோக்கோடும் பல்வேறு கலாசார நிகழ்வுகளை இக் கனடா தேசத்தில் நடாத்தி வருவதை நேரடியாகவும் ஊடகங்கள் வாயிலாகவும் நாளாந்தம் அறிந்து வருகின்றோம்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் குறிப்பாக அரசியல் காரணங்களால் நிலத்திலிருந்து புலத்திற்கு புலம்பெயர்க்கப்பட்ட மக்களாகிய ஈழத்தமிழர்கள், தாம் வாழ்ந்து வருகின்ற நாடுகளில் **மறந்துபோவமோ மண்ணின் வாசனை தொலைந்து போவமோ தூரதேசத்தில்** - என்ற ஈழத்துக் கவிஞன் ஒருவனின் ஏக்கத்தை உள்வாங்கியவர்களாகவும், கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக சுயநிர்ணய உரிமையோடு கூடிய ஒரு அரசியல் தீர்வுக்காய் போராடி வருகின்ற மக்கள் கூட்டமாய் இருப்பதனாலும், தமது தாய் நிலத்தில் தாம் வாழ்ந்த வாழ்வின் விழுமியங்களை ஒரு கொதி நிலையில் வைத்து பேண வேண்டிய கடப்பாடு உள்ளவர்களாக உள்ளார்கள்.

இவ்வாறானதொரு புறச்சூழலில் தான் நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கத்தின் தோற்றத்தையும், அதனது 15 ஆண்டுகால செயற்பாடுகளையும் என்னால் பார்க்க முடிகிறது. ஆரம்பத்திலிருந்து இன்றுவரை பலர் எமது சங்கத்தின் வளர்ச்சிப் பாதையில் தூண்களாக நின்று சங்கத்தின் செயற்பாடுகளுக்கு வலுச்சேர்த்திருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது அன்பான நன்றியை பகிர்ந்து கொள்கிறேன். இவர்களில் சிலர் எம்மிடையே தற்போது இல்லை. அவர்களை நெகிழ்வோடு நினைத்துப் பார்க்கிறேன். அத்தோடு பல தொல்லைதரும் புறக்காரணிகளுக்கு மத்தியில் தான் பிறந்த மண், தன்மூதாதையர் வாழ்ந்த மண், தனக்கு படிப்பையும், பண்பையும் போதித்த பாடசாலைகள், பக்தியையும், நற்பழக்கவழக்கங்களையும் கற்றுக்கொடுத்த கோயில்கள், தன்னால் நேசிக்கப்படும் தற்போது அங்கு வாழும் உறவுகள், தனது இனத்தின் விடுதலை போன்ற பல்வேறு உயரிய எண்ணங்களை உள்ளங்களில் தாங்கி இவற்றில் ஒரு சிறிய முன்னேற்றத்தை அல்லது மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு சங்கத்தின் பணிகளில் கைகோர்த்து பயணிக்கின்ற அனைத்து சங்க உறுப்பினர்களுக்கும் எனது சிரம்தாழ்த்தி கரம் கூப்பி அன்பான நன்றியை பகிர்ந்து கொள்கிறேன்.

மேலும் இந்நிகழ்வு வெற்றிபெற உதவிய விளம்பரதாரர்கள், ஊடக நண்பர்கள், இசை ஆசிரியர்கள் – மாணவர்கள், எல்லாவற்றிலும் மேலாக இவ்வாறான நிகழ்வுகளை நடாத்துவதற்காக உங்களது இல்லக்கதவுகளை தட்டும்போது இன்முகத்துடன் வரவேற்று அன்பையும், ஆதரவையும், நல் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்ற எமது உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் உரிமையோடு சங்கத்தின் நன்றியை பகிர்ந்து கொள்கிறேன்.

கீழ்நோக்கிப் பிடித்தாலும் எப்பொழுதும் மேல்நோக்கியே எழுந்து எரிகின்ற தீபத்தைப் போன்று தீபம் நிகழ்வும், நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கமும் தொடர்ந்தும் வளர்ச்சிப் பாதையிலே பயணிக்கும் என்பதை உறுதியாகக் கூறிமுடிக்கின்றேன்.

**அங்கும் இங்கும் அலைந்து திரிந்து - நாம்**
**ஏதிலி வாழ்வினில் உதிரம் வடிப்பினும்**
**எங்கள் மொழிக்கொரு புதுவளம் சேர்ப்போம்**
**எண்ணமெலாம் தமிழே எனவாழ்வோம்.**

என்றும் நன்றியுடன்

**விஜயராமலிங்கம் மனோகர்** (முன்னாள் ஆசிரியர், வவுனியா தெற்கு கல்வி வலயம்)

செயலாளர்

நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சாரதா பீடம்

## ஸ்ரீநிவாச குகனேஸ்வர சர்மா

புங்குடுதீவு - 05, இலங்கை.

சகல இந்துமத கிரியைகளும் ஆகமவிதிமுறைப்படி செய்து தரப்படும். பதிவுத் திருமணம், திருமணம், கணபதி ஹோமம், இலட்சுமி ஹோமம் மற்றும் கிரக சாந்தி போன்ற வைதீகக் கிரியைகளையும் சிறப்பாக செய்வதற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம். திருமண மண்டபங்களும் ஒழுங்கு செய்து தரப்படும்.



மேற்குறிப்பிட்ட சேவைகளைப் பெற அழையுங்கள்.

**சிவத்திரு. ஸ்ரீநிவாசக் குகனேஸ்வரக் குருக்கள்**

**(குகன் குருக்கள்)**

(அருள்மிகு கனேடிய நயினாதீவு நாகம்மாள் கோவில் உற்சவகாலங்களின் முதன்மைக் குருக்கள்)

**416-292-6089| 416-335-5505**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களோடு ஒரு சில நிமிடங்கள்



நாம் இன்று நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கத்தின் 15வது ஆண்டின் தீபம்–2011 கலை நிகழ்வில் இணைந்திருக்கின்றோம். இப்பெருநிகழ்வை நிகழ்த்துவதற்கு எமக்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய எமது ஊரின் உறவுகளையும், நண்பர்களையும், வர்த்தகப் பெருமக்களையும், சங்க உறுப்பினர்களையும் பெருமையோடும், நெகிழ்வோடும் நினைத்துப் பார்க்கிறேன்.

கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் ஊரின் முன்னேற்றம் கருதி பல செயற்திட்டங்களை தயாரித்துள்ளோம். சங்கத்தின் மூலமாக பயனடைந்த பலரில் சில உறவுகளின் நன்றிக்கடிதங்கள் இம்மலரில் பிரசுரித்திருக்கின்றோம்.

இம்முறை **அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்** என்ற பாரதியின் வரிகளுக்கு வடிவம் கொடுப்பதற்காய், எமது ஊர் மாணவர்களின் கல்வி வளர்ச்சியை பிரதான விடயமாக செயற்படுத்துவதற்கு திடசங்கற்பம் பூண்டுள்ளோம். இவை அனைத்திற்கும் உங்களின் மேலான ஆதரவையும், ஆலோசனைகளையும் வேண்டி நிற்கின்றோம்.

***ஊரை உயர்த்த ஒற்றுமையோடு உழைப்போம்.***

நன்றி,

**தில்லைநடராசா விக்னராஜா**
பொருளாளர்
நயினாதீவு கனேடிய அபிவிருத்தி சங்கம்.

## என்மனவானில் சிறகை விரிக்கும் தீபம் கலை நிகழ்வு



தீபம் கலை நிகழ்வின் 15 வது படிக்கல்லில் நின்று கொண்டு உங்கள் யாவரையும் பத்திராதிபராக சந்திப்பதில் பேருவகை கொள்கின்றேன்.

> **“காற்றினில் தென்றல் கலந்துவர; கடல் அலையோ**
> **ரிதமென ஒலித்துவர; நாற்திசையும் அன்னை**
> **புகழ் பரப்பும் நயினையின் மைந்தராய்**
> **என்றென்றும் மகிழ்ந்திடுவோம்”**

நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கத்தின் 15 வது ஆண்டு தீபமலர் எம் கையில் தவழ்வதற்கு எல்லா வழியிலும் உதவிபுரிந்து நேசக்கரம் நீட்டிய அனைத்து கலை உள்ளங்களுக்கும் வர்த்தகப் பெருமக்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இம் மலரானது அதிகளவில் ஆக்கங்களை தாங்கி வெளிவராவிட்டாலும் தீபம் கலை நிகழ்வை பெரும் நிதி செலவில் நடத்துவதற்கு உறுதுணையாக இத் தீபமலர் நிதி வழங்கி நிற்பதில் மட்டற்ற மகிழ்சி அடைகின்றோம். இம்மலரை உரிய நேரத்தில் நேர்த்தியாக அழகாக அச்சிட்டு வெளியிட்ட APEX நிறுவனத்தாருக்கும் எனது நன்றியை பத்திராதிபர் என்ற வகையில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வாழ்க எம் தமிழர் வணிகம்! வளர்க தமிழ்!

என்றென்றும் நன்றியுடன்

**முத்தையா ரவீந்திரன்.** B.Com
பத்திராதிபர்
நயினாதீவு கனேடிய அபிவிருத்தி சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதன்மை விருந்தினரின் செய்தி

அன்பார்ந்த நயினைமக்களே! வணக்கம்.



"யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்று செல்கிறது புறநானூற்றுப் பாடல். இதைப் பாடியவர் 'கணியன் பூங்குன்றனார்' என்ற புலவர் என்பது பலருக்கும் தெரியும். ஆனால் அது அந்தப் புலவரின் சொந்தப் பெயர் அல்ல. அவர் பூங்குன்றம் என்ற ஊரைச் சேர்ந்த கணிதவல்லுநர் அல்லது கணக்காளர் என்பதையே அந்தப் பெயர் நமக்கு உணர்த்துகின்றது. 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' (கேளிர் – உறவினர்கள்) என்ற பரந்துபட்ட உலக சிந்தனைக்குள் புகுந்த மாபெரும் புலவரது சொந்தப் பெயர் அங்கேயே அமுங்கி ஆழ்ந்து விட்டது.

ஆனால், அந்தக் கவிஞரது சொந்த ஊராகிய பூங்குன்றம் அங்கிருந்து மேலெழுந்து இலக்கிய வானில் இன்றுவரை சுடர்விடுகின்றது. இதுதான் சொந்த ஊரின் சிறப்பு. நமது சிறந்த செயல்களாலும், சீரிய சிந்தனைகளாலும் உயரிய படைப்புகளாலும், ஆக்கங்களாலும் நாம் நமது சொந்தப் பெயரை நிலைநிறுத்த ஒருவேளை முடியாது போனாலும் அவற்றால் நமது ஊர்ப் பெருமை நிச்சயம் உயரும் என்பதற்கு மேற்குறித்த புலவரின் மேற்குறித்த ஒரே ஒரு கவிதை போதிய சான்றாகக் கடந்த சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக நிலைத்திருக்கின்றது.

சொந்த ஊரை அனைவருக்கும் தெரிவிக்கும் விதமாக அவ்வூர்ப் பெயருக்கு முன்னிடம் தந்து சொந்தப் பெயரை எழுதும் முறை தமிழ்நாட்டுத் தமிழர் மத்தியில் பெருமளவிலும், ஈழத்தமிழர் மத்தியில் ஓரளவிலும் கடந்த நூற்றாண்டில் பரவியிருந்தது. பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் (ஈரோடு வெங்கட்டப்பநாயக்கர் ராமசாமி) தனது சொந்த ஊரை தன் பெயருடன் சேர்த்து வைத்துக் கொண்டார். அறிஞர் அண்ணா அவர்கள் (காஞ்சிபுரம் நடராசன் அண்ணாத்துரை) C.N. அண்ணாத்துரை என்றே தன் முழுப்பெயரை எழுதி வந்தார். தமிழறிஞர், சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் (ராசவல்லிபுரம் பெருமாள் செட்டியார் சேதுப்பிள்ளை) தனது சொந்த ஊரான ராசவல்லிபுரத்தையும் தன் பெயருடன் இணைத்துக் கொண்டார். சொல்லின் செல்வர் இல்லையேல், யாரறிவார் அந்த ராசவல்லிபுரம்?

இந்த நடைமுறை குறிப்பிட்ட பெரியோர்களது சொந்தப் ஊர்ப் பற்றை வெளிப்படுத்தியதோடு அவர்களது செயற்பாடுகளால் விளைந்த பெருமைக்கு அவர்களது சொந்த ஊர் உரிமையும் புகழும் பெறும் சூழலையும் ஏற்படுத்திக் கொடுத்தது. ஈழத்தவரில், நவாலியூர் சோமசுந்தரப்புலவர், நயினைக்கவி இராமுப்பிள்ளை, நயினை நாகமணிப்புலவர், சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர், இருபாலைச் சேனாதிராய முதலியார், சிறுப்பிட்டி வை. தாமோதரம்பிள்ளை ஆகிய பெருமக்கள் இத்தகையவரே. நயினை மக்களாகிய நாம் பாரதூரமான பிழைகள் எதையுமே செய்யாமல் சும்மா இருந்தாலே நமது ஊருக்குப் பெருமையும் சிறப்பும் உண்டு. நம்முடையது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் நீண்ட வரலாறு. அதற்கும் பல ஆயிரம் ஆண்டுகள் அதிகமான கால வரலாறு என்றும் சில அறிஞர்கள் கருதுகின்றனர். நமது அன்னை நாகம்மாளின் கோவில் கருவறைக்குள் இருக்கும் ஐந்தலை நாகச் சிலை, சுமார் எண்ணாயிரம் முதல் பதினான்காயிரம் வரையான ஆண்டுகள் பழைமை வாய்ந்ததென்ற அறிஞர்களின் கூற்று, எம் ஊரில் எழுந்த நாகர் வழிபாட்டின் தொன்மையையும், நாகர்குல நாகரிகச் சிறப்பும் தனித்துவமும் இத்தீவில் வாழும் மக்களது வாழ்வியலுடன் இரண்டறக் கலந்து நீண்ட நெடுங்காலமாக நிலவி வருகின்றனவென்ற உண்மையையும், வெளிப்படுத்துகின்றது.

இந்தத் தொன்மையும், பெருமையும் இந்தத் தீவில் வாழுகின்ற அனைத்து மக்களதும் பொதுச்சொத்தாகும். சொல்லப் போனால் இவை சைவசமயத்தவருக்கு மட்டும் உரியனவல்ல. இன்று கிறீஸ்தவர்களாகவும், முஸ்லீம்களாகவும் மதம் மாறியுள்ள, நயினையில் தோன்றிய எமது உடன் பிறப்புகளுக்கும் இதில் சமபங்கு உண்டு. ஏனெனில் அவர்களும் எம்மைப்போல் மணிபல்லவத் தாயின் பிள்ளைகளின் பின்னோர்களே. மக்கள் முதலில் தோன்றினர். மதங்கள் இடையில் வந்தன. மக்களை மதங்கள் பிரிக்க முடியாது, பிரிக்கவும் கூடாது. நமது முன்னோர், நமது பெற்றோர், இந்த ஊரை இனியதொரு ஊராக சாதி, மத, பிரதேச வேறுபாடுகள் கடந்த, நீதி செழிக்கும் நிலமாகப் பேணிக்காத்து வந்தார்கள். வயல்களை ஆக்கி, வரம்புகள் கட்டினர். குளங்களும் கேணிகளும் தோண்டி வைத்தனர். கோவில்களையும், தேவாலயம், மசூதி என்பவற்றையும் பள்ளிக்கூடங்களையும் அமைத்தனர். இப்பெருஞ்சாதனைகளை வசதிகள் குறைந்திருந்த அக்காலத்திலேயே அவர்கள் நிறைவேற்றுவதற்கு அடித்தளமாக இருந்தது எது? அவர்களது ஒற்றுமையும் பொதுநலநோக்கமும் அன்றோ? பொதுநல நோக்கரை தன்நலம் கருதுவோர் தோற்கடிப்பாராயின் சமூக ஒற்றுமை பாதிப்புறும். அதன் பின் விளைவாக, சமூகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் நலனும் பாதிப்புக்குள்ளாகும்.

ஆக நயினைமக்கள் வாழ்வு சிறக்க, நமது ஊர் நலன் மேம்பட்டு வளர, பொதுநலனை முன்னிறுத்திச் செயற்படும் அன்பர்களுக்கு ஊக்கமும், உதவியும் வழங்கிடுவோம். நமது ஊர், நமது பாடசாலைகள், நமது கோவில்கள், நாம் ஓடிவிளையாடித் திரிந்த தெருக்கள், ஒழுங்கைகள், நம் குளங்கள், கேணிகள் ஆகிய பொதுச் சொத்துக்களுக்குப் பங்கமேதும் ஏற்பட்டுவிடாமல் பாதுகாத்து வருங்கால நயினை மக்களிடம் அவை பாதுகாப்பாகச் சென்றடைய எம்மால் முடிந்தவரை பாடுபட்டு உழைப்போம். இத்தொடர்பில், இன்றும் நம்ஊரில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மவர்க்கு உதவிக்கரம் நீட்டுவோம். இதுவே நமது முதற்கடன் ஆகும்.

நன்றி
அன்பன்
நாகேசு சிவராச சிங்கம்
28-04-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

soldhouse.ca

# DO YOU THINK
## LOTS OF WORK IS REQUIRED TO BUY OR SELL A HOUSE

இன்றைய வேகமான உலகில், உங்களுக்கு என்று ஒரு இல்லம் வாங்குவது என்றாலோ அல்லது உங்களுடைய வீட்டை விற்பது என்றாலோ அது ஒரு கடினமா வேலையாக உங்களுக்கு தெரியலாம்.

ஆனால் என்னுடைய அனுபவத்தில், Home inspection, Real estate legal issue, Mortgage arrangement, மற்றும் உங்கள் வீட்டை வாங்கவோ விற்கவோ தேவையான அனைத்து தேவைகளையும் திறமையானவர்களின் துணையுடன் இலகுவாக செய்து தரப்படும்.


HOMELIFE HIGHER STANDARDS

**HOMELIFE/FUTURE**
REALTY INC., BROKERAGE
*Independently Owned and Operated

GOLD AWARD WINNER 2010

SATISFACTION 100% GUARANTEED

# 416.894.9122



# KIRUBA THANABALASINGHAM
Sales Representative

Inkflavour.com 042211

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினைந்து ஆண்டுகள் பின்னோக்கிய பசுமையான நினைவுகளும் சங்க செயற்பாடுகளும்

நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கம் தனது 15 வது தீபம் கலை நிகழ்வில் உங்களை சந்திப்பதில் பெருமை கொள்கின்றது. கடந்த 15 ஆண்டுகள் சங்கத்தின் முக்கிய செயற்பாடுகளை நினைவு கூருவது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமாக அமையும்.

சங்கத்தின் ஆரம்ப கால செயற்பாடுகள் கனேடிய மண்ணில் தீபம் கலை நிகழ்வை நிகழ்த்துவதோடு அதில்சேரும் நிதிப் பங்களிப்பில் ஒரு பகுதியை எமது நயினை மண்ணின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் உதவுவதற்காக செலவு செய்யப்பட்டது. ஆண்டுகள் சில கழிந்தபின், சமூக முன்னேற்ற செயற்பாடுகளுக்கு சங்கத்தின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப்பட்டது. அதன்படி நயினாதீவில் அரசினர் மருத்துவமனைக்கான உதவிகள், வறுமைக் கோட்டின் மத்தியில் வாழும் மக்களுக்கான சிறு பண உதவி, மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டு உடனடி சிகிச்சைகளுக்காக எதிர்பார்த்து நிதி வசதி வேண்டி வரும் கோரிக்கைகளுக்கு செவிசாய்த்து சிறு பணஉதவி வழங்குதல் என்ற பல்வேறு பரிமாணங்களில் எமது பணி விரிவு படுத்தப்பட்டது. இதற்காக சில சமயங்களில் சங்கத்தின் நிதி நிலமைகள் போதாமல் இருக்கும் பட்சத்தில் எம் ஊர் உறவுகளிடம் கனடாவில் நிதி திரட்டப்பட்டு உதவிகள் செய்யப்பட்டதை இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூருகின்றோம்.

புலம்பெயர்த தேசத்தில் எம் ஊர் உறவுகளின் நலன் கருதி ஆரம்பிக்கப்பட்ட முதல் சங்கம் என்ற பெருமையை நயினாதீவு கனேடியர் அபிவிருத்திச் சங்கம் பெற்று நிற்கின்றது. காலப் போக்கில் சுவிஸ், பிரான்ஸ், லண்டன், கொழும்பு என்று பல இடங்களில் நயினை மக்களின் நலன் விரும்பி சங்கங்கள் உருவாகியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தீபம் கலை நிகழ்வுகளுக்கு கிடைத்த ஆதரவும் ஊக்குவிப்பும் எம் மக்களின் மனம் உவந்த பங்களிப்பும் ஒத்துழைப்பும் எமது பணிகளை மேலும் விரிவுபடுத்தி பாரிய அளவிலான செயற்பாடுகளை செய்வதற்கு சங்கத்தின் நிதி வளங்களை திறந்து நிற்கின்றது. இச் செயற்பாடுகளை பின்வருமாறு வரிசைப் படுத்திக் கொள்ள முடியும்.

- 1997ம் ஆண்டு சித்திரை 12ந் திகதி தீபவிழாவை கொண்டாடி அதில் கிடைத்த நிதியில் $500.00 எமது ஊர் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
- 1998ம் ஆண்டு தீபம் மூலம் கிடைத்த நிதியில் $3000.00 மூன்று பாடசாலைகளுக்கும் அனுப்பி வைத்ததுடன் மூன்று பாடசாலை தொண்டர் ஆசிரியர்களுக்கும் இரண்டு ஆண்டுகள் நிதி உதவி வழங்கியதுடன் அம்பிகையின் திருவிழா காலத்தில் சங்கத்தினால் தாக சாந்தி நிலையமும் சாரணர் பாசறைகளுக்கும் நிதி உதவி செய்யப்பட்டது.
- 1999 – 2000 ஆண்டு தீபத்தின் மூலம் மருத்துவ நிதிக்காக $6,000.00 களும் தமிழர் புனர்வாழ்வுக்காக $15,000.00 வரையும் பங்களிப்பு செய்யப்பட்டது. நயினாதீவு அரசினர் வைத்தியசாலைக்கு வேண்டிய உபகரணங்களும் வாங்கி அனுப்பி வைக்கப்பட்டது.
- 2001–2003 காலப்பகுதியில் நயினாதீவு மூன்று பாடசாலைகளுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டது.
- 2004 – 2005 ஆண்டு சுனாமி பேரழிவால் எம் தாயக மக்கள் அல்லல்பட்டபோது எமது சங்க இளைஞர்கள் எம் மக்களிடம் $16600.00 டொலர்களை சேகரித்து தாயக உறவுகளுக்கு அனுப்பிவைத்தார்கள். அத்துடன் ஆலங்குள வீதி புனரமைப்புக்கு கொழும்பு சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய $7,500.00 டொலர்கள் நிதி உதவி வழங்கப்பட்டது. கால் ஊனமுற்ற இருவருக்கு மூன்று சில்லு துவிச்சக்கர வண்டிகளும் கண்பார்வை குறைந்த மாணவர்கட்கு $2,500.00 டொலர்களும், இருதய சத்திரசிகிச்சைக்காக $2,050.00 டொலர்களும் வழங்கப்பட்டது. இக்காலப் பகுதியில் கோடைகால ஒன்றுகூடல் நிகழ்வு முதல்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- 2006ம் ஆண்டு பத்தாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக நயினையம்பதியில் தீர்த்தக்கரை எனும் சிறப்பு நூல் வெளியிடப்பட்டது. இதற்கான செலவு $12,400.00 டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.
- 2007ம் ஆண்டு யுத்த சூழ்நிலைகளால் ஊர் தொடர்புகள் மட்டுப்படுத்தப்படிருந்தமையால் எமது செயற்பாடுகள் தீபம் கலைநிகழ்வு ஒன்றுகூடல் என மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.
- 2008ம் ஆண்டு மருத்துவ உதவிக்காக விண்ணப்பித்த 2 குடும்பங்களுக்கு $1,157.00 டொலர்கள் வழங்கப்பட்டதுடன் இலங்கையின் வட–கிழக்கு வாழ் சத்துணவு குன்றிய கற்பிணிப் பெண்களுக்கான சத்துணவு திட்டத்துக்காக $2,000.00 டொலர்களும், வன்னி இறுதி சமரின் போது பாதிக்கப்படும் மக்களுக்கான புனர்வாழ்வு நிதிக்காக (CARE ஊடாக) $20,000.00 டொலர்கள் எம்மக்களிடம் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. $3,000.00 டொலர்கள் அங்கத்தவர் சந்தாப்பண வகையில் வங்கியில் நிரந்தர வைப்பிலிடப்பட்டது.
- 2009ம் ஆண்டு போர்அவலங்களால் வன்னியில் இருந்து வவுனியாவுக்கு வருகை தந்து இடைத்தங்கல் முகாம்களில் வசித்துவந்த கர்ப்பவதி பெண்களுக்கான அன்பளிப்பு நிதியாக $3,350.00 டொலர்கள் வழங்கப்பட்டது.
- 2010இல் நயினாதீவு கல்வி, அபிவிருத்தி சமூக நலத்திட்டங்களுக்காக $3,625.00 டொலர்கள் வழங்கப்பட்டது. இதில் $1,770.00 டொலர்கள் சல்லிபரவை மைதானத்துக்கான அணைக்கட்டு மின்சார வழங்கலுக்காகவும் $1,320.00 டொலர்கள் சமூக நல திட்ட கொடுப்பனவாகவும் மிகுதி கல்வி அபிவிருத்திக்காகவும் வழங்கப்பட்டது.
- 2011ல் மீண்டும் மாபெரும் கலை அரங்கில் 15வது ஆண்டு தீப நிகழ்வு கொண்டாடப்படுவதுடன் நயினை சிறார்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பல செயற்திட்டங்களை நிறைவேற்ற உறுதி பூண்டு நிற்கின்றோம்.

தகவல் : நயினையம்பதியில் தீர்த்தக்கரை நூல், சங்கத்தின் வருடாந்த கணக்கறிக்கைகள், ஆண்டறிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BALA SELVAM

JEWELLERY & FOREIGN MONEY EXCHANGE



Tel : 416 - 264 - 4000

2480 Eglinton Ave. E. #6 Scarborough, ON M1K 2R4

Sathiya's

சின்னக்கடை மீன் சந்தை

CHINNA KADAI FISH & MEAT MARKET




Fresh, Frozen Sea Food
Fresh Meat
East & West Indian Groceries
and much more....

3005A Islington Ave, (between Steels & Finch)

Tel: 416.740.1384

ERAA SUPER MARKET



இலங்கை, இந்திய, கனேடிய
உணவுப் பொருட்கள்,
உடன் கடலுணவு வகைகள்,
இறைச்சி வகைகள்
என்பனவற்றை மலிவான விலையில்,
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

2607 Eglinton Ave. E, Scarborough. ON

Tel : 416.269.2622 | Hot : 416.265.4152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெற்றியே அன்றி வேறு அறியாச் சிங்கம்

## நாகேசு எஸ். சிங்கம்

கனடா நாட்டில் குடிவரவு மற்றும் அகதி மனு தொடர்பான விவகாரங்களில் 22 ஆண்டுகால பட்டறிவும் பயிற்சியும் பெற்றவர்!


* அகதிக் கோரிக்கைகள் தொடர்பிலான அனைத்து விடயங்களும் - Refugee Claims
* கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் தொடர்பில் மேன்முறையீடுகள் - Appeals etc.
* குடும்ப உறுப்பினர்களைப் பொறுப்பேற்று அவர்களுக்குக் கனடாவில் நிரந்தர வதிவுரிமை பெறுதல் - Sponsorship
* மனிதாபிமான அடிப்படையில் நிரந்தர வதிவுரிமை கோரும் மனுக்கள் - H & C applications
* தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்பு வேலைகள் - Tamil, English and Sinhala Translations

தொலைபேசி எண் : 647-774-6018

மின் அஞ்சல் : nagesu.singam@gmail.com

# சுவையகம்

Takeout & Catering



உங்கள் திருமணவிழாக்கள், பிறந்ததின விழாக்கள் மற்றும் அனைத்து விசேட வைபவங்களுக்கும் அறுசுவை உணவுகளை ருசித்து மகிழவும் தாயகத்தின் சுவைகளை உண்டு மகிழவும் நாடுங்கள்

**இரண்டு இடங்களில் உங்களுக்கான சேவை**


**T : 416.491-8241**
**416.716.0543**

2950 Birchmount Rd, Unit 3&4,
Scarborough, ON M1W 3G5

**T : 905-294-4769**
**416-880-0777**

101-72 Copper Creek Dr,
Markham, ON (9th & 14th Ave.)

வட அமெரிக்காவில் மிகப் பெரிய தமிழர் நிறுவனம்




* இலங்கை இந்திய உணவு வகைகள்
* உடன் மரக்கறி வகைகள்
* உடன் இறைச்சி வகைகள்
* கடலுணவு வகைகள்

# உதயாஸ்

சுப்பர் மார்க்கட்

**5010 Steeles Ave., West, Unit 14,**
**Etobicoke, ON (Steeles & Kipling)**

**Tel: 416 - 740 - 7971**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAVE up to 50% on your

# Home Phone & Internet !

**Home phone:**

1.Unlimited Free calling **Canada & USA** for $21.99



·SAME PHONE NUMBER IS AVAILABLE

· ALL THE FEATURES ARE INCLUDED



2. Unlimited Free calling to 60 countries for $29.99

y *North America, Europe, Australia, India, China, Japan, Russia……*

*High speed internet-Unlimited:* $35.99



Order now and get

$100 VISA Reward Card!

**BUNDLE SERVICES FOR BIG SAVINGS!** ASK HOW!

For more detail contact : Ravi (647) 500-3443


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரெழு வைத்திலிங்கம் சோதிட நிலையம்

நீங்கள் சிறந்த முறையில் சோதிட
பலாபலன்களை அறிய விரும்பின்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**K.V. Kanesamoorthy**

**905.944.9548**

29 Sterling Crescent, Markham, ON L3R 7K2

# DIANA Beauty Salon




1031 Markham Road,
Scarborough, ON M1H 2Y5

**416.439.5002**

2402 Eglinton Ave. E.,
Scarborough, ON M1K 2P3

**416.701.1565**




# அபூர்வாஸ்

டெக்கோற் & பார்ட்டி சேர்விஸ்

உங்கள் இல்லங்கள் தோறும் வந்து எங்கள்
கைவண்ணத்தில் புதியதோர் உணவுப் பரிமாற்றம்

வானவில் ஏழுவர்ணம் வசந்த நிகழ்வில் எங்களின் பலவர்ணம்

| விமல் | உதயன் | சுபாஸ் |
|---|---|---|
| 647.272.7019 | 416.629.2753 | 647.278.8313 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் 2011



**அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலம்) :** திரு. M. ரவீந்திரன் (பத்திராதிபர்), திரு. V. மனோகர் (செயலாளர்), திரு. K. கிருபானந்தன் (தலைவர்), திரு. T. விக்னராஜா (பொருளாளர்), திரு. A. சதானந்தன், திரு. N. ஜெயசிவதாசன்.

**நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) :** திரு. V. குகநாதன், திரு. P. உதயபாலன், திரு. T. பரமேஸ்வரன், திரு. K. நித்தியானந்தசிவம், திரு. K. சுபாஸ்சந்திரபோஸ் (உப செயலாளர்), திரு. K. நவநீதன், திரு. R. விஜயகுமார், திரு. S. மோகனராஜன், திரு. P. நந்தகுமார், திரு. S. பிரபாகரன், திரு. K. குலசிங்கம், திரு. M. சிவனேசன்.

**சமூகமளிக்காத உறுப்பினர்கள் :** திரு. S. முருகவேள், திரு. R. திருவதனன் (உபதலைவர்), திரு. N. ஸ்ரீமுருகதாசன், திரு. P. யோகேஸ்வரன், திரு. S. குலமோகன் (கணக்காளர்), திரு. S. விமலானந்தன் (கணக்காளர்), திரு. T. சிவயோகலிங்கம், திரு. S. உமைமாறன், திரு. T. இளங்குமரன், திரு. P. சுந்தரவேல், திரு. K. இராமதாஸ், திரு. M. சசிவாணன், திரு. M. விவேகானந்தன், திரு. N. சுதர்சன், திரு. M. உதயவாணன், திரு. M. பரமேஸ்வரன், திரு. M. பிரகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Markham NS Dental
*So much begins with smile*

**Dr. Nalini Sutharsan DDS**
*Family and Cosmetic Dentistry*

9293 Hwy 48, Suite 4, Markham, ON. L6E 1A3
Tel : **905-472-4111** Fax : 905-472-4115
www.markhamNSdental.com drnalini@markhamNSdental.com




*Care, Comfort, Convenience, Confidence......*

So much begins with smile


# நிகழ்ச்சி நிரல்

**5:15 மங்கள விளக்கேற்றல்**
திரு. திருமதி. தி. க. மகாலிங்கசிவம் இணையர்
திரு. திருமதி. க. சோதிராசா இணையர்
திரு. திருமதி. ந. சுதர்சன் இணையர்.

**5:25 கனேடிய தேசியக் கொடியேற்றல்**
திரு. தி. விக்னராஜா (பொருளாளர்)

**5:30 கனடா கீதம்**
செல்வி. சாயகி ஜெயகாந்

**5:35 தமிழீழ தேசியக் கொடியேற்றல்**
நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதி

**5:40 அகவணக்கம்**

**5:45 சங்கக் கீதம்**
செல்வி. தர்சா ராஜலிங்கம்
இசைக்கலைமணி ஸ்ரீமதி. குலநாயகி விவேகானந்தன்
அவர்களின் முதன்மை மாணவி

**5:50 தமிழ்த்தாய் வாழ்த்து**
நயினைச் சிறார்கள்
சாயீசன் மனோகர், சிவானுஜன் சிவனேசன், நர்த்தகி பிரணகார்த்திகரன்,
சேயோன் மனோகர், அருவி குலமோகன், அபிமன்யு குலமோகன்,
அமுதீசன் ஓங்காரலிங்கம், அபிராமி ஓங்காரலிங்கம், ஆதீசன் ஓங்காரலிங்கம்
சாயகி ஜெயகாந், பிரசன்னா இராஜ்மோகன், இரஞ்சீவன் இளங்கோ.

**6:00 வரவேற்பு நடனம்**
"INDO CANADA DANCE ACADEMY" மாணவிகள்
தயாரிப்பு: ஸ்ரீமதி பத்மினி ஆனந்த் அவர்கள்

**6:10 வரவேற்புரை**
திரு. கோ. சுபாஸ்சந்திரபோஸ் (உபசெயலாளர் ந.க.அ.ச)

**6:15 பேச்சு**
"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு"
செல்வன். பிரனேஸ் மணிமாறன்

**6:20 பாரம்பரிய நடனம்**
ஸ்ரீ அபிராமி நாட்டியாலய மாணவர்கள் வழங்கும்
"சரணம் நீயே பூசணி"
தயாரிப்பு : ஸ்ரீமதி செந்தில்செல்வி சுரேஸ்வரன் அவர்கள்

**6:30 தலைமையுரை**
திரு. க. கிருபானந்தன் (தலைவர் ந.க.அ.ச)

**6:40 மலர்வெளியீடு**
திரு. மு. ரவீந்திரன் (பத்திராதிபர் ந.க.அ.ச)

**முதற்பிரதி பெறுநர்**
திரு. சு. குலமோகன் அவர்கள்

**6.45 வாத்திய பிருந்தா**
மிருதங்க வித்துவான் திரு. செல்வநாயகம் சண்முகலிங்கம்
அவர்களின் மாணவர்களும்
சங்கீத கலாவித்தகர் ஸ்ரீமதி லசந்தி ராஜ்குமார் அவர்களின்
மாணவர்களும் இணைந்து வழங்குகிறார்கள்.

**7:15 பேச்சு**
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - செல்வி அட்சனா மோகேந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**P. KAYILASANATHAN** B.A (Cey.) L.L.B (Cey.)

**Barrister & Solicitor**

**உங்கள் தேவைகளுக்கு குறிப்பாக....**

* குற்றவியல் வழக்குகள்
* குடிவரவு, அகதி விண்ணப்ப விசாரணைகள்
* மேன்முறையீடுகள்
* மனிதாபிமான அடிப்படை விண்ணப்பங்கள்
* ஸ்பொன்சர் சம்பந்தமான சகல விடயங்கள்
* வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல், விற்றல்
* குடும்ப விவகாரங்கள்
* வாகன விபத்துக்கள் தொடர்பான நட்டஈடு கோருதல்
* வாணிபச் சட்டங்கள் சம்பந்தமான சகல விடயங்களுக்கும்

**Tel: 416-752-9561 | Fax: 416-752-7262**

2401 Eglinton Ave, East, Suite 302, Scarborough, ON M1K 2M5


**7:20 விடுதலை நடனம்** — அபிநயாலயா நாட்டியாலய மாணவர்கள்
தயாரிப்பு: ஸ்ரீமதி ரஜனி செல்வப்பிரகாசம்

**7:30 திரை இசை நடனம்** — **Reckless Movementz**
தயாரிப்பு: செல்வன். நிருஷன் நீலவண்ணன் அவர்கள்

**7:40 அம்மன் நடனம்** — ஆத்மதர்ப்பணம் நடனக் கல்லூரி மாணவர்கள்
தயாரிப்பு : ஸ்ரீமதி சிந்துஜா சிவசிதம்பரம்

**7:50 பிரதம விருந்தினர் உரை** — திரு. நாகேசு சிவராசசிங்கம் அவர்கள்
**சிறப்பு விருந்தினர் கௌரவிப்பு** — திரு. இ. ஜீவானந்தம் அவர்கள் (USA)

**8:00 கிராமிய நடனம்** — சாந்தநாயகி நாட்டியக் கோவில் மாணவர்கள்
தயாரிப்பு : ஸ்ரீமதி பூங்குழலி இளங்குமரன் அவர்கள்

**8:15 பேச்சு** — பட்டாம் பூச்சிகள் - செல்வி. அருவி குலமோகன்

**8:20 THILLANA** — THILLANA FROM THE CLASSICAL DANCE TRADITION OF BHARATANATYAM. THEY HAVE BEEN TRAINED AT NRTYAKALA: THE CANADIAN ACADEMY OF INDIAN DANCE UNDER ARTISTIC DIRECTOR DR. MENAKA THAKKAR

**8:30 பேச்சு** — ஆறுமுகநாவலர் - செல்வி. யாமினி பாஸ்கரன்

**8:40 வழக்காடு மன்றம்** — குற்றவாளிக் கூண்டில் கனேடிய தமிழ் பெற்றோர்கள்
நீதிபதி. சட்டத்தரணி திரு. கனக மனோகரன் அவர்கள்
முதலியார். திரு. க. குலசிங்கம் (B.Sc, B.Eng) அவர்கள்

**வாதிகள்**
திரு.க.ந.ஜெயசிவதாசன் (B.Com, Dip.In.Edu)
செல்வி. சியாமா சிவயோகலிங்கம் (York University)
Dr. கு.செந்தூரன்

**பிரதி வாதிகள்**
திரு.மு.ரவீந்திரன் (B.Com, Dip in Mgt)
திருமதி. விமலேஸ்வரி விசுவலிங்கம் (B.A)
திருமதி.கலாநிதி குலமோகன் (B.A. Hons)

**9:30 - 10:00** — **இடைவேளை**

**10:00 திரை இசை நடனம்** — LLS Entertainment
தயாரிப்பு : செல்வன். தனேஸ் சதானந்தன் அவர்கள்

**10:10 நாடகம்** — முதுமை வந்தபோது தீபம் நாடகக் குழுவினர்.
நெறியாள்கை : திரு. நவசுதன் அவர்கள்


**10:40 நன்றியுரை** — திரு. வி. மனோகர் (செயலாளர் ந.க.அ.ச)

**10:45 இன்னிசை நிகழ்ச்சி** — நவநீதனின் "இன்னிசை மாலை"

**12:00 நிறைவு**

**நிகழ்ச்சித் தொகுப்பு : திரு. செல்வா விமல், செல்வி. அகல்யா கைலாசபதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




RE/MAX®
Crossroads Realty Inc. Brokerage
Independently Owned and Operated
**Office : 416-491-4002**
1055 McNicoll Avenue, Toronto, ON. M1W 3W6

**Yathavann Selvarajah**
*Sales Representative*
**Dir: 416-992-4474**
www.buzzmetoronto.com
Not intended to solicit individuals under contract.





**நீங்கள் 85 வயதிற்கு குறைந்தவரா?**
**உங்களுக்கு நீரழிவு நோய் உள்ளதா?**

எங்களிடம் மருத்துவப் பரிசோதனையில்லாத காப்புறுதி உண்டு.

ஒரே ஒரு காப்புறுதி நிறுவனம் மட்டுமே 85 வயது வரைக்கும் காப்புறுதி செய்கிறது.

மாதாந்தக் கட்டணம் என்றுமே மாறாது

அழையுங்கள்



**Abdul & Nancy**
**416.800.0881**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NALLUR KUMARAN HOMES NEAR CHENNAI

## For Sale - From $ 42900

**Brand New 2 bed Rooms - 2 Wash rooms - Living Hall - Dining Hall and Kitchen**




## THE HOUSE SITES ARE LOCATED IN THE MOST FAMOUS TOURIST PLACE IN SOUTH INDIA

- 6 KM from Mahabalipurm, Golden Beach, ECR Road,
- 4 KM from OMR Road, 2 KM from Hospital, Town & Bus Terminal
- 200 Meters from Famous College, State HighWay
- 500 Meters from 5 Star Hotels
- Pure ground drinking water
- 40 minutes drive from Chennai International Airport

**There are many free facilities for home buyers**

**Relax and enjoy the unpolluted air, the fields, hills and sea breeze**

**Call: R. Rishihesan**
**Cell: (416) 518 - 5056**
**Bus: (905) 944 - 2444**

**Visit Nallur Kumaran**
**No.5, Hillcroft, Drive, Unit # 4**
**Markham, ON, L3S 1R6**
**(McCowan / Steeles)**

**Visit Nallur Kumaran**
**2607 Eglinton Ave. East**
**Scarborough, ON**
**(First floor, Era Supper market)**

Design & Print : Saralex Printers – (416) 613 - 2961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ASIA GOLD INC.

**Also We do Money Transfer**

**Specialized in:**
**Singapore 22K, 24K Gold Jewelleries**
**Expert in Custom Jewellery and Repairs**
**High Quality Diamonds,**
**Natural Gem Stones & Wedding Bands**

**Jewellery Repair in One Hour**

**16B-5010 Steels Ave. W., Etobicoke,**
**M9V 5C6 (Kipling & Steels)**
**Tel: 416-746 ASIA (2742) www.asiagoldinc.com**

# EMBASSY RESTAURANT

Samosa s King

*Dine in Take Out and Catering Banquet Hall*

*We undertake catering for all occasions*

**Tel: 416.332.0944, 416.412.1793 | Fax: 416.332.4789**

5210 Finch Avenue East, 6-12, Scarborough, ON M1S 4Z4

"உங்கள் தேவையே எமது சேவை"

# ராஜாராம் உணவுச்சேவை

அறுசுவை அமுதை ராஜரீகத்தில் பணிவுடன் படைத்திடுவோம்



தரமான பாகம் தவறாத நேரம் தரமோ நிரந்தரம்

திருமணமா, பிறந்ததினமா, கல்லூரியின் அல்லது ஸ்தாபனங்களின் வருடாந்த விழாக்களா, வேறு வைபவங்களா, அந்தியஷ்டியா, திவசமா, மற்றும் வீட்டில் நடக்கும் சிறுவைபவங்களா எதுவானாலும் அழையுங்கள் வகை செய்வோம்.

காலை 9:00 மணிமுதல் மாலை 8:00 மணிவரை

www.rajahram.com

**Tel: 416-299-5200 Fax: 416-299-5795**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**RE/MAX**

Vision Realty Inc. Brokerage
Each office independently Owned and Operated

Bus:416.321.2228, Fax: 416.321.0002
www.ceylingo.com, E-mail:karunag@remax.net
2210 Markham, Rd., Unit 1, Toronto, ON M1B 5V6

**கருணா கோபாலபிள்ளை**
Real Estate Broker

**416.830.8520**

மிஸிஸாகா, பிரம்ரன், எற்றோபிக்கோ மக்கள் இதுவரை கண்டிராத மிகப் பிரமாண்டமான காட்சியறையுடன்


# அக்ஸ்யாஸ் பஷன்

2010க்கான New Design சேலைகள் புதிய டிசைன் கூறை சேலைகள்
காஞ்சிபுரம், Cut Work Sarees, Fancy சேலைகள்
பெண்களுக்கான New Design பஞ்சாபிகள், சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைகள், ஆண்களுக்கான ஆடைகள், Fancy நகைகள், கைக்கடிகாரம் அன்பளிப்பு பொருட்கள், பரத நாட்டிய பொருட்கள் இன்னும் பல.....

*03- 93 Dundas Street, Mississauga, ON*
*(Dundas and Hurontario Dollar Rama* க்கு அருகில்)

**Tel: 905-306-7052**
**Fax: 905-306-7382**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Priya Video



தரமான DVD, AUDIO CD, MP3 SONGS
மற்றும் சின்னத்திரை நாடகங்கள்
வாடகைக்கும் விற்பனைக்கும்

2404 Eglinton Ave. East, Scarborough, ON. M1K 2P3 416-759-5503

## திருமணப் பதிவாளர் REGISTRAR OF MARRIAGES

- பதிவுத் திருமணம்
- 3யு மங்கள சேவை
- திருமண சட்ட ஆலோசனை
- திருமண அலங்காரங்கள்
- அழகிய திருமண மண்டபங்கள்
- திருமண குருக்கள்மார்கள்
- அறுசுவை உணவு வகைகள்

மற்றும் பல....

**ஓங்காரலிங்கம் நாகமணி**
(திருமணப் பதிவாளர்)
*(Ex. Staff of Jaffna Post Office)*



**Cell: 416.797-3324**
**Tel: 416-754-0572**



MR BEAUTY CENTER

# Beauty Center

## அழகு மாடம்

அனைத்து இல்ல திருமணப்பெண் அலங்காரம்,
பூப்புனித நீராட்டு விழா,
பரத நாட்டிய அரங்கேற்றம்,
பிறந்ததினக் கொண்டாட்டம்
மற்றும் தலை - முக அலங்காரங்கள்,
தலைக்கு எண்ணை மசாஜ் செய்து விடப்படும்

with this flyer 10% OFF

உடனே அழையுங்கள் : ரதி

T : 905.471.4371, C : 416-605-6153
400 Elson Road, Markham (Markham & Elson)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STAR DJ VISION

DJ SERVICES | CATERING SERVICES | VIDEO PHOTO SERVICES
MAGIC SHOWS | SMOKE MACHINES | FIRE WORKS
HOME DECORATION | GENERATOR RENT

TORONTO / SCARBOROUGH / MISSISSAUGA / MARKHAM & MORE



Please call us for all occasions

DJ Mohan DJ Balan

Tel: 416.803.8316
416-629-2753
416-843-1507



தீபம் 2011 வெற்றிபெற வாழ்த்துக்கள்


# ஈழநாடு

ஒரே நேரத்தில் 6 நாடுகளில் வெளியாகும் ஒரே ஒரு பத்திரிகை...

Tel: 905 - 653 - 3000 | Cell: 416 . 841 . 9600
Fax: 905 . 653 . 4031
P.O. BOX 878, STATION 'Q' TORONTO, ON, CANADA M4T 2N7



# RAVEEN TAX



* Book Keeping & Accounting Services
* Personal Tax & E-Filing
* Self Employment Tax Filing
* Corporate Tax Services

Fast & Accurate Tax Service

* Investment Advice RRSP & LSRSP
* Resume / Cover Letter Preparation
* Business Registration & In-corporation
* HST Filing & Payroll remittance

Ravi: 416 . 579 . 4502

2641 Eglinton Ave, East (Inside SP Electronics) Brimley & Eglinton

தீபம் 15 வது ஆண்டு கலை நிகழ்வு சிறப்புற வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- 24 Hrs Advertisement Until **Sold**
- **Free** Market Evaluation
- If Necessary **Staging** Advising
- Call your **Neighborhood** relator to sell your house **Fast**
- Local **news paper** listing

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/Future**
**Realty Inc. Brokerage**
7 Eastvale Dr. Suite 205, Markham, ON. L3S 4N8 Fax : 905-201-9229
**Tel : 905-201-9977**



**GNANA** Nagulendran
*Sales Representative*
**416-648-6561**
*Email : gnagule@hotmail.com*
*www.gnanahome.com*

**I WILL WORK DILIGENTLY UNTIL YOU'RE SATISFIED. BEFORE AND AFTER THE SALE**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2010 கோடைகால ஒன்றுகூடல், விளையாட்டுப் போட்டி, நாடகக்குழு சம்பந்தமான நிழற்படங்கள் சில...













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் உறவுகள் சிலரின் நன்றிக்கடிதங்கள்

உ. சிவமயம்
8ம் வட்டாரம்,
நயினாதீவு
29/06/2010

நயினாதீவு கனடா அபிவிருத்திச் சங்கம்
தலைவர் / செயலாளர் / பொருளாளர் அவர்களுக்கு

[illegible]

ஐயா,

நயினாதீவு 8ம் வட்டாரத்தில் வசிக்கும் [illegible]

[illegible]

இப்படிக்கு
[illegible]

---

த. நந்தினி
7ம் வட்டாரம்
நயினாதீவு
27/6/2010.

கனடா,
நயினாதீவு கனடியன் அபிவிருத்திச் சங்க தலைவர்,
அவர்களுக்கு.

நயினாதீவு தெற்கு கிராம சேவகர் – J36
ஊடாக.

ஐயா,

நந்தினி தயானந்தன், 7ம் வட்டாரம் நயினாதீவு ஆகிய நான் தங்களுக்கு விளையமாக தெரிவித்துக் கொள்வது யாதெனில், எனது கணவர் 50 வயதைக் கொண்டவர் நோய்வியாதி உள்ளவர் கடலுக்கு தொழிலுக்கு செல்வதில்லை. உழைக்கக் கூடிய ஆதரவு பிள்ளைகளும் இல்லை. இரண்டு பெண் பிள்ளைகளும் ஒரு வயது இளைய பெண் பிள்ளைகளுமே உள்ளனர். மிக முக்கியமாக தங்களுக்கு தெரியக் கூடிய தாழ்மையான கோரிக்கை வைக்கிறேன் வீடு மற்ற பெண் [illegible] தற்போது 10 வயது [illegible] [illegible] மகளார் (மனோவியாதி, [illegible] பேசமுடியாதவர்) இவர் கடைசிப் பெண்பிள்ளை. இவரும் இவர் பெயர். தயானந்தன் அனுஷ்கா. இவரும் பராமரிப்பதற்கு தங்கள் அபிவிருத்திச் சங்கத்தின் நிதி கொடுத்து விரைவாய் மிகுந்த கொண்டுவிடுகிறேன். [illegible] அபிவிருத்தியுடன் இணைந்து நன்றி

இங்ஙனம்
நம்பிக்கை உள்ள
× த. நந்தினி

(த. நந்தினி)
NIC NO. 735834746V

---

திருமதி வி. ஜெகநாதன்,
5ம் வட்டாரம்,
நயினாதீவு.
30.06.2010

நயினாதீவு கனடியன் அபிவிருத்திச் சங்கம்
கனடா.

பிள்ளைகளின் விசேட பராமரிப்பிற்கான
ஊக்குவிப்பு நிதி பெற்றுக் கொண்டமைக்கான
நன்றிக் கடிதம்.

நயினாதீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வி. ஜெகநாதன் ஆகிய நான் நயினாதீவு கனடியன் அபிவிருத்திச் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர்கள் அனைவருக்கும் அறியத் தருவது என்னவெனில், பிள்ளைகளின் விசேட பராமரிப்பிற்கான கிராம சேவகரின் அத்தாட்சிப்பத்திரத்துடன் தங்கள் சங்கத்திடம் கோரிய உதவிக்கான ஆரம்ப ஊக்குவிப்பு நிதியான ரூபா 25 000 ஐ 26/06/2010 அன்று யா/நயினாதீவு மகா வித்தியாலய விழா மண்டபத்தில் தங்கள் சங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டமைக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு தங்கள் ஒன்றியத்தின் சேவை மேலும் தொடர உயர்வுடைய நயினாதீவு நாகபூஷணி அம்பாளின் அருளாசி கிடைக்க வாழ்த்துகின்றேன்.

"நயினாதீவு கனடியன் ஒன்றியம் வாழ்க வளர்க."

நன்றி.

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
V. Jeganathan
(வி. ஜெகநாதன்)

---

திருமதி அரோஜன் சந்திரமதி
8ம் வட்டாரம்
நயினாதீவு
19.08.2010

தலைவர்
நயினாதீவு கனடிய அபிவிருத்திச் சங்கம்
தலைவர், செயலாளர், பொருளாளர்
மற்றும் சங்க உறுப்பினர், கனடா

அன்புடையீர்,

நயினாதீவு 8ம் வட்டாரத்தில் வசிக்கும் திருமதி அரோஜன் சந்திரமதி ஆகிய நான் அறியத் தருவது. எனது கணவர் அரோஜன் அவர்கள் புற்று நோய் காரணமாக கடந்த 1½ வருட காலமாக மகரகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று சத்திர சிகிச்சை மூலம் வயிற்றில் கட்டி அகற்றப்பட்டு தற்போது நோய்வாய்ப்பட்டு தொடர்ந்து யாழ் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றார். எவ்வித தொழிலும் செய்ய முடியாத நிலை. எனக்கு மூன்று பெண் குழந்தைகள் 12 வயது 10 வயது 6 வயது பிள்ளைகள் உள்ளார்கள் எங்களது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் உள்ளோம். ஆதலால் தங்கள் சங்கத்தின் [illegible] வழங்க வேண்டும் என்று மிக பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனது விண்ணப்பத்தை ஆவன செய்யுமாறு மிக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இங்ஙனம்
உண்மையுள்ள
அரோஜன் சந்திரமதி,

தலைவர்/செயலாளர்
கனடிய அபிவிருத்திச் சங்கம் (நயினாதீவு)

மேற்படி விண்ணப்பதாரி எனது பிரிவில் இருந்து வருபவர் என்பதுடன், இவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் உண்மையானவையாகும். இவருக்கான [illegible] உதவிகள் வழங்கப்படின் சிறந்ததாகும்.

Miss V. Balasundaram
Grama Officer
J/36, Nainativu South
19.08.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MERCURY TAX
## ACCOUNTANTS & CONSULTANTS

**PUVA / GNANA**
2387 Eglinton Ave, E #1
T:416.750.3600 | C:416.566.3673

**PUVA / RAJ**
6790 Davand Dr. #4 Missisauga
T:905.750.5507 | F:905.795.9633

**KULA**
80 Nashdene Rd, Unit #B-26
T:416.840.0090 | C:416.566.3673

**VIMAL**
5010 Steel Ave W, Unit #10
T:416.747.5009 | C:647.272.7019

**RAJ**
2990 Eglinton Ave, E. #212
T:416.265.3346 | F:416.566.3673

For Confidential & Reliable Service
Contact : Puva & Raj

- Personal Income Tax with E-File
- Corporate Income Tax Service
- USA tax Return Preparation
- RRSP Investments
- Property Management Renting & Real Estate
- Business Accounting, GST, PST, Payroll
- Business Registrations & Incorporation

# நேற்று இன்று நாளை
## நம்மவர் மத்தியில்

# 416.PUNCH ME

Century 21
Affiliate Realty Inc. Brokerage*

**PUNCH**
SOCKALINGAM
Broker



# 416.786.2463

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவிக்கோரிக்கைக் கடிதம்

இடம்:

29.6.2010

7ம் வட்டாரம்

கனடா அபிவிருத்திச்சங்கம் நயினாதீவு. நயினாதீவு.

தலைவர், செயலாளர், பொருளாளர் அவர்கட்கு

ஐயா,

செல்வராசா நாகேஸ்வரியாகிய நான் அறியத்தருவதாவது எனது கணவர் கடந்த 2005.8.21 அன்று T.V திருத்தும் விபத்தில் திடீரென அகால மரணமடைந்து விட்டார். இதன் பின்னர் நானும் எனது (3) மூன்று பிள்ளைகளும் சீவன வசதி இன்றியும் எவ்வித வழிகளும் இன்றி கஷ்டத்தை எதிர்நோக்கி உள்ளோம். இந்நிலையில் பிள்ளைகள் புலமைப்பரிசில் சித்தி பெற்றும் O/L தராதரத்தில் 6A.B.C.S. என்ற தரமான சித்தியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அவர் மேலும் A/L தரத்தைப் படிக்க நயினாதீவுப் பாடசாலையில் அப்பாடங்கள் இல்லாததனால் தற்போது யாழ் இந்துக்கல்லூரியில் கல்வியைக் கற்கச் சென்றுள்ளார். அவரது தேவைகளைப் பூர்த்தி செய்து மற்றைய இருபிள்ளைகளையும் படிப்பிப்பதற்கான பண வசதியின்மையால் மிகவும் அவதிப்படுகின்றேன். இந்நிலையில் எனது பிள்ளைகள் அவர்கள் கல்வியை இடைநிறுத்தி கூலி வேலைகளுக்குச் செல்ல வேண்டும் என்ற நிலை ஏற்படும் என்பதை தங்களுக்கு மிகவும் மனவேதனையுடன் அறியத்தருகிறேன். திறமையான பிள்ளைகளை உங்கள் அன்புக்கரங்களால் அவர்களது கல்வியை மேலும் தொடர உதவி செய்யுமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். 27.6.2010ல் நடத்தப்பட்ட தங்களது பாராட்டு விழாவில் இவர்களை உங்கள் மேடை பாராட்டப்பட்ட இருவரையும் என்பதனை மகிழ்வோடு அறியத்தருகின்றேன்.

நன்றி.

இ. நாகேஸ்வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

APEX CREATIONS


PRINTING - SIGN - BANNERS

416-297-0707

www.apexcreation.ca

• Incredible Quality • Quick Turnaround • Personal Service • Competitive Prices

Service with Integrity, Dependability And Knowledge.



RMA
REAL MORTGAGE ASSOCIATES

Real Mortgage Associates
Licence No: 10464



Das Narayanasamy AMP
Mortgage Broker

Cell: 416.543.6614
Fax: 1-888-511-8960
Email: dasnrmabroker.ca
Lic # M08007147

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதிர்ந்த எம் உறவுகளை 15வது ஆண்டு மலரில் மீண்டும் நினைவு கூருவோம்!

எம்மோடு இக் கனடா மண்ணில் வாழ்ந்து அமரத்துவமடைந்த எமது ஊரை தாய்நிலமாகக் கொண்டவர்களின் பெயர்விபரங்களை இத் தீபம் – 2011 சிறப்பு மலரில் பதியப்பட்டு அவர்களுக்கான அகவணக்கத்தை செலுத்துவதில் நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கம் நெகிழ்வடைகிறது. இவர்களை இழந்து தவிக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், சங்கம் ஆறுதலையும், தேறுதலையும் வழங்குகின்றது. அத்துடன் இவ்விபரங்கள் மிகக்குறுகிய காலத்தில் எம்மால் சேகரிக்கப்பட்டு இங்கு நிரல்படுத்தப்பட்டுள்ளது. இவ்விபரக் கொத்தில் எமது உதிர்ந்த உறவுகளில் யாராவது தவறவிடப்பட்டிருந்தால் அதற்காக அவ்வுறவின் உறவினர்களிடம் சங்கம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதுடன் அடுத்த ஆண்டு மலரில் கண்டிப்பாக அவ்விபரம் இணைக்கபடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

1. திரு. இராமச்சந்திரர் குமரையா
2. திருமதி. குமரையா மங்கையற்கரசி
3. திரு. கந்தையா மயில்வாகனம்
4. திரு. முத்தர் இராமலிங்கம்
5. திரு. குணரட்ணம் ஜீவானந்தன்
6. திரு. கனகசபை கதிரவேற்பிள்ளை
7. திரு. சோமசுந்தரம் கந்தசாமி
8. திரு. சபாரட்ணம் ஸ்ரீஸ்கந்தராசா
9. திரு. அருமைநாயகம் ஸ்ரீகாந்தன்
10. திரு. தம்பையா தருமலிங்கம்
11. திருமதி. தவநாயகபதி பிரகாசபாக்கியாம்பாள்
12. திரு. மயில்வாகனம் மகாலிங்கம்
13. திருமதி. மகாலிங்கம் தில்லைவனம்
14. திருமதி. குணரட்ணம் விசாலட்சி
15. திரு. தில்லையம்பலம் குலசிங்கம்
16. திருமதி. தாமோதரம்பிள்ளை முத்தாச்சி (முத்தம்மா)
17. திருமதி. கனகரெத்தினம் விமலாதேவி
18. திருமதி. கணபதிப்பிள்ளை சௌந்தரம்
19. திருமதி. முத்தையா செல்லாச்சி
20. திரு. கு.வை. முத்தையா
21. திரு. நடராசா மணிவண்ணன்
22. திரு. கணபதிப்பிள்ளை நாகராசா
23. திருமதி. இராசமோகன் சந்திரா
24. திரு. நடராசா சின்னக்குட்டி
25. திருமதி. நடராசா சுந்தரேஸ்வரி
26. திருமதி. சிவபாக்கியாம் நடராசா
27. திரு. கார்த்திகேசு கந்தையா
28. திரு. மதியாபரணம் ஸ்ரீநிவாசன்
29. திருமதி. சிவமணி மகேந்திரன்
30. திரு. தருமலிங்கம் சுதாகரன்
31. திருமதி. திலகவதி மகாலிங்கம்
32. திருமதி. சுந்தரவதனி ஸ்ரீபதி
33. திருமதி. இராஜராஜேஸ்வரி திருநாவுக்கரசு
34. திரு. முருகேசு சந்திரசேகரம்
35. திருமதி. அமுதம்மா வீரவாகு
36. திரு. பொன்னம்பலம் திருநாவுக்கரசு
37. திருமதி. இராசம்மா இராசரெத்தினம்
38. திருமதி. கனகாம்பிகை கனகசேகரம்பிள்ளை
39. திரு. நடராசா பொன்னையா
40. திரு. அம்பலவாணர் சின்னத்தம்பி
41. திருமதி. மீனாம்பாள் செல்லத்துரை
42. திரு. தம்பையா கணபதிப்பிள்ளை
43. திரு. இராமுப்பிள்ளை அப்பாத்துரை
44. திருமதி. தங்கம்மா சரவணமுத்து
45. திரு. முத்தையா கிருஸ்ணானந்தராஜா
46. திரு. இரத்தினம் யசோதரன்
47. திரு. தயாளன் மருதப்பு
48. திருமதி. சாந்தினி சுரேஸ்கரன்
49. திரு. கந்தசாமி கனகசபாபதி
50. திருமதி. கனகம்மா குமாரசாமி
51. திரு. குணரெட்ணம் சர்வானந்தன்
52. திருமதி. சாரதாதேவி நாகேஸ்வரன்
53. செல்வி. இ. துளசிவேணி
54. திரு. ராஜகதிர்வேல் பத்மேஸ்வரன்
55. திரு. சண்முகநாதன் உருத்திரநாதன்.

குறிப்பு:

நயினாதீவை தாயகமாகக் கொண்டவர்கள் கனடாவில் அமரத்துவம் அடைந்த வேளையில் எமது சங்கமானது கண்ணீர் அஞ்சலி செலுத்தி அகவணக்கம் செய்வது வழமையான நிகழ்வாகும். சில சமயங்களில் தவிர்க்கமுடியாத காரணங்களால் கண்ணீர் அஞ்சலி செலுத்த தவறவிடப்பட்டிருந்தால் அத்தவறுக்காக சங்கம் மன்னிப்பு வேண்டி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனம் திறந்து நன்றி சொல்கின்றோம்...

நயினாதீவு கனேடிய அவிபிருத்திச் சங்கத்தின் தீபம் – 2011 கலை நிகழ்வை காண வந்திருக்கும் எமது உறவுகள், நண்பர்கள், கலாரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் முதற்கண் எமது நன்றிகள்.

தீபம் – 2011 கலைநிகழ்வை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைத்த பெரியோர்களுக்கும்,

கனடிய தேசியக் கொடியை ஏற்றிவைத்த சங்கத்தின் பொருளாளர் திரு. விக்னராஜா அவர்கட்கும்,

தேசியக்கொடியை ஏற்றி வைத்த நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதி நிதிக்கும்,

சங்கக் கீதத்தைத் தொகுத்து வழங்கிய இசைக்கலைமணி திருமதி. குலநாயகி விவேகானந்தனுக்கும், அவருடைய மாணவிக்கும்,

கனடாக் கீதத்தைஇசைத்த செல்வி சாயகி ஜெயகாந்திற்கும்,

தமிழ்தாய் வாழ்த்தை வழங்கிய நயினைச் சிறார்களுக்கும்,

எமது அழைப்பை ஏற்று இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் முதன்மை விருந்தினர் திரு. நாகேசு சிவராசசிங்கம் அவர்கட்கும், சிறப்பு விருந்தினர் திரு. இ. ஜீவானந்தம் அவர்கட்கும்,

நடன நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கிய அனைத்து நடனப்பள்ளிகளின் ஆசிரியைகளுக்கும், மாணவர்களுக்கும்

திரை இசை நடனத்தை வழங்கிய செல்வன் நிருஷன் நீலவண்ணன், செல்வன் தனேஸ் சதானந்தன் மற்றும் நிகழ்வில் பங்காற்றியோருக்கும்

நாடகம், இன்னிசை நிகழ்ச்சி, வழக்காடு மன்றம், வாத்தியப் பிருந்தா போன்ற நிகழ்வுகளை நடாத்திய அனைவருக்கும்,

விழா மண்டபத்தை தந்துதவிய கல்விச்சபையினருக்கும், பாதுகாப்பை வழங்கிய காவற்துறையினருக்கும்,

நிகழ்ச்சிகளை ஒலியமைப்பு, படப்பிடிப்பு, புகைப்படமாக்கல் போன்றவற்றை மேற்கொள்வோருக்கும்,

தீபம் – 2011, ஒன்றுகூடலும் விளையாட்டுப் போட்டியும், தீபம் சிறப்பு மலர் மற்றும் ஊரின் வளர்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை சிறப்பாகச் செய்வதற்கு எமக்கு நிதியுதவிகளையும், ஆலோசனைகளையும் வாழங்கிய ஊரின் உறவுகள், வர்த்தகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள் ஆகியோருக்கும்,

இந்நிகழ்வை மக்களிடம் சேர்ப்பித்த உலகத்தமிழர், ஈழநாடு போன்ற பத்திரிகைகளுக்கும், TVI, CMR ஊடகங்களுக்கும். Inayam Net இணையத்தளத்திற்கும்,

இம்மலரை சிறப்பாக அச்சிட்டுத்தந்த Apex Creation அச்சகத்தாருக்கும்,

தீபம் – 2011 நிகழ்வுக்கான நிகழ்சிகளுக்கான ஒத்திகைகளை மேற்கொள்ள நயினாதீவு நாகம்மாள் கலாசார நிலையத்தை தந்துதவிய அருள்மிகு கனேடிய நயினாதீவு நாகம்மாள் கோவில் பணிப்பாளர் சபையினருக்கும்,

சங்கத்தின் கூட்டங்களை நடாத்துவதற்கு தமது பணிமனைகளை தந்துதவிய Mercury Tax, கருணா கோபாலபிள்ளை போன்றவர்களுக்கும், தமது சொந்த இல்லங்களை தந்த சங்க உறுப்பினர்களுக்கும்.

தீபம் – 2011 கலை நிகழ்வை சிறப்பாக நடாத்துவதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கிய சங்கத்தின் நிருவாகசபை உறுப்பினர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எல்லோருக்கும்,

எங்களுடைய சிரம் தாழ்ந்து இருகரம்கூப்பி பணிவான நன்றியை பகிர்ந்து கொள்கின்றோம்,

நன்றிகள் பல

நயினாதீவு கனேடிய அபிவிருத்திச் சங்கம்
கனடா – April 30, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Design & Printed by Apex:416-297-0707

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org